Registered as a ewspa Nper

A/L விஞ்ஞானக் கல்விக்கு
யாழ் நகரில் மிகவும் பாதுகாப்பான சூழலில் ஒழுங்கான வகுப்புகளுக்கு அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
BOND INSTITUTION JAFFNA

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

O/L இலவச வினா-விடை மீட்டல் வகுப்புகள்
(எல்லாப் பாடங்களும்)
வகுப்புகளினால் ... மாணவர்களுக்காக இவ்வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்க
Bond INSTITUTION JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 9 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 21 (26-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 290

# திருமலையில் துருப்புகள் குவிப்பு; பெரும் முற்றுகைக்கு முஸ்தீபு!

## தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேற்றம்

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, அக்டோபர் 26

திருகோணமலையில் பெரும் எண்ணிக்கையான அரசாங்க துருப்புகள் குவிக்கப்படுகின்றன. கும்புறுபிட்டி ஆயுதப்படை முகாம் முன்னர் இருந்ததைவிட மேலதிக வசதிகளுடன் பலப்படுத்தப்படுகின்றன. பெரிய அளவிலான முற்றுகைக்கான முஸ்தீபு நடவடிக்கையே இது என்று நம்பப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து திருமலைத் தொகுதியின் வடபகுதித் தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

கடந்த இரண்டு, மூன்று தினங்களாக கும்புறுபிட்டியில் உள்ள ஆயுதபடை முகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது

தரை மார்க்கமாக இதுவரை 10, 12 வாகனங்களில் துருப்புகள் கும்புறுபிட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஹெலிக்கொப்டர்களும் அடிக்கடி அங்கு சென்று வருகின்றன.

கும்புறுபிட்டி, நிலாவெளி, குச்சவெளி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதான பகுதிகளில் பெரும் முற்றுகை ஒன்றை நடத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அதனால் அப்பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயரத் தொடங்கி உள்ளனர்.

அண்மையில் ஆயுத படையினரின் முற்றுகைக்குள்ளான சாம்பல் தீவு, சல்லி ஆகிய கிராமங்களுக்கு அருகில் நிலாவெளி, கும்புறுபிட்டி, குச்சவெளிக் கிராமங்கள் உள்ளன.

இதற்கிடையில் குச்சவெளிக் கிராமசேவையாளரான அப்துல் லத்தீப் அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். (அ-எ-150)

## காயமடைந்த இளைஞர் மரணமானார்

மட்டக்களப்பு, அக் 26

மட்டக்களப்பு உதவிப் பொலீஸ் அதிபர் தியோபிளஸின் மகன் தியோக் குமார் சுட்டுக் கொல்லப்பட்ட சமயம் காயம் அடைந்த இளைஞர் ரமேஷ் தோமஸ் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவரான இவர், மட்டுநகர் சர்வமத சம்மேளனத்தின் தலைவரும் ஆவார்.

இவரின் சடலம் கொழும்பில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த செப்டம்பர் 29 ஆம் திகதி இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு சுடப்பட்டவர்களில் இந்த இளைஞரும் ஒருவர். (இ-எ-21)

## சேலை அணிந்து தப்பிய சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், அக். 26

அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த 12ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின்போது ஆயுதங்களைப் போட்டுவிட்டு தப்பி ஓடிய சிப்பாய்கள் சிலர் சேலை அணிந்து பெண்கள் வேடத்தில் தமது முகாமை அடைந்தனராம்.

இந்த மோதலில் 16 சிப்பாய்கள் கொல்லப்பட்டதும் இரு சிப்பாய்கள் உயிருடன் பிடிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

புலிகளிடம் பிடிபடாது தப்பிய சிப்பாய்களில் சிலரே வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்ட சேலைகளைச் சுற்றிக்கொண்டு தப்பிச் சென்றனராம். (இ-5)

## புதுடில்லியில் உண்ணாவிரதம்
### சந்திரகாசன் தலைமையில்

சென்னை, அக். 26

இலங்கை சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி திரு. எஸ். சி. சந்திரகாசன் தலைமையில் புதுடில்லியில் நாளை திங்கட்கிழமை உண்ணாவிரதம் நடைபெறும்.

இன ஒழிப்பில் இருந்து இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கக் கோரும் (PROTEG) இயக்கத்தலைவர் திரு. சந்திரகாசன் என்பது தெரிந்ததே.

கைதிகளை விடுவிக்கக் கோருவதுடன் வேறுபல கோரிக்கைகளையும் முன் வைத்தே திரு. சந்திரகாசன் இந்த உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்துள்ளார் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-எ)

## திருக்கேதீஸ்வரம் ஆலயம் சேதம்

யாழ்ப்பாணம், அக். 26

சென்ற செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் மன்னாரில் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயம் பெரும் சேதத்துக்குள்ளானது.

மன்னார் அரச அதிபர் ஜனாப் மச்பூல் ஆலயத்தின் சேதமுற்ற பகுதிகளைச் சென்று பார்வையிட்டார்.

ஆலயத்தை மூடிவிடப் போவதாக ஆலய நிர்வாக பொறுப்பதிகாரி புலவர் திருநாவுக்கரசு அரச அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

மாந்தை, அடம்பன் கண்டல், நாவற்குளம், நாகதாலி பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2000 பேர்வரை அகதிகளாக ஆலயத்தினுள் இருந்த போதே சிப்பாய்களால் ஆலயம்மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

தாக்குதலில் தெய்வாதீனமாக எவரும் காயமுறவில்லை.

தாக்குதலால் ஆலய வாசலிலுள்ள பிள்ளையார் கட்டடம், வசந்த மண்டபம், ஆலயதெற்கு, மேற்கு வீதிகள், கொழும்பு கதிர்காம யாத்திரிகர் மடம் என்பன சேதமுற்றன.

ஆலயத்தின் உள்வீதிகளில் இருந்து பெருந் தொகையான வெற்றுத் தோட்டாக்கள், சிதறிய ஷெல் துண்டுகள் என்பவற்றைப் பொறுக்கி எடுத்து அரச அதிபரிடம் காட்டினர்.

இத்தாக்குதலின்போது ஆலயப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு இ. போ. ச. பஸ்களும் சேதம் அடைந்தன. (இ-5)

## புலிகளின் உறுப்பினர் ஒருவரைக் கொல்ல ரூ. 20,000 சன்மானம்
### இராணுவத்தால் 3 கண்ணிவெடிகளும் தரப்பட்டன என்கிறார் செல்வபாலா

யாழ்ப்பாணம், அக். 26

புலிகளின் உறுப்பினர் ஒருவரின் காருக்குக் குண்டு வைத்தால் 20 ஆயிரம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என பலாலி இராணுவ முகாம் அதிகாரி தெரிவித்தார்.

நேற்று அரியாலையில் மக்களின் கேள்விகளுக்கு பதிலளித்த விடுதலைப் புலிகளின் கைதி செல்வபாலா இவ்வாறு தெரிவித்தார்.

அதற்காக தன்னிடம் பலாலி இராணுவ முகாமில் இருந்து மூன்று கண்ணிவெடிகளும், வயர்களும் தரப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

அதனை வீதிகளில் கொண்டு நடமாட முடியாத காரணத்தால் தமக்கு இராணுவத்தால் கைக்குண்டும் வழங்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

மக்களின் பல கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். (இ-10)

## கண்ணிவெடிகளுடன் மக்கள் முன்னிலையில் செல்வபாலா நிறுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், அக். 26

செல்வபாலா நேற்று அரியாலை தபாற்கட்டைச் சந்தியில் மக்கள் முன் நிறுத்தப்பட்டிருந்தார்.

இவரது வளவினுள் இருந்து மீட்கப்பட்ட கண்ணிவெடிகள், வயர்கள் கைக்குண்டுகள் சகிதம் இவர் மக்கள் பார்வைக்காக அங்கு நிறுத்தப்பட்டிருந்தார்.

பொதுமக்களின் தகவலை அடுத்து புலிகளின் கைதியான செல்வபாலாவின் வீட்டு வளவினுள் இருந்து இந்த மூன்று கண்ணிவெடிகளும், கைக்குண்டும் புலிகளினால் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டன.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இவர் புலிகளின் பாதுகாப்பில் இருந்து வருவதுடன் தீவிர விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டும் வருகிறார்.

இதனை அடுத்து பொது மக்கள் கொடுத்த தகவல் மூலம் அந்த இடத்திற்கு விரைந்த புலிகளின் மோப்பம் பிடிக்கும் நாயான "ரொக்ஸி" நிலத்தினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி பொருள்களைக் கண்டு பிடித்தது.

செல்வபாலாவின் வீட்டு வளவினுள் உள்ள மாமரம் ஒன்றின் கீழ் இந்த கண்ணிவெடிகளும் குண்டும் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை இவருடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படும் மேலும் பலர் புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (இ-10)

### சுபநேரம்

26-10-1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9.03 முதல் 10.33வரை

ராகுகாலம்:
4.33 முதல் 6.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி பி.ப 2.16 வரை

## மண்டை தீவில் கடற்படைப் படகு!

மண்டைதீவு, அக். 26


மண்டைதீவுத் துறைக்கும் குருநகர் துறைக்குமிடையே நடைபெற்று வந்த படகுசேவை நேற்று (சனிக்கிழமை) தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மண்டைதீவு கடல் பிராந்தியத்தில் கடற்படைக்குச் சொந்தமான படகு ஒன்று வந்து நின்றதே இதற்குக் காரணமாகும்.

இப் படகிலிருந்து பல பொதிகள் இறக்கப்பட்டு பிளாஸ்டிக் வள்ளம் ஒன்றின் மூலம் மண்டைதீவு மினி இராணுவ முகாமுக்கு சேர்க்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இச் சம்பவத்தை அறிந்த போராளிகள் குழு முன் எச்சரிக்கையாக பல சத்த வெடிகளை வெடிக்கச் செய்தனர். (அ-88)

முச்சந்தி முனி



ஆமிக்காரர் சீலை உடுத்துக்கொண்டு தப்பினோம் பிழைச்சோம் எண்டு முகாமுக்குப் போச்சினமாம்......... உதுதான் ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் எண்டு சொல்லுறது.

## பல்கலைக்கழக அங்குரார்ப்பண விழா

மட்டக்களப்பு, அக். 26

கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் அங்குரார்ப்பண விழா நேற்றுக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு பாதுகாப்பு அளிக்குக
### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோருகிறது

கொழும்பு, அக். 26

பாதுகாப்புப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையேயான மோதலில் இருந்து யாழ் ஆஸ்பத்திரியையும் டாக்டர்கள், நோயாளர்களையும் காப்பாற்றும்செயல் நடவடிக்கைகளை எடுக்கும்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது

இது சம்பந்தமாக தேசிய பாதுகாப்பு அமைச்சரைப் பேட்டி காண சங்கம் தீர்மானித்துள்ளது.

நேரிற் சந்திக்க ஒரு திகதியை ஒதுக்கித் தரும்படி சங்கம் அமைச்சரைக் கேட்டுள்ளதாக சங்கச் செயலாளர் டாக்டர் டபிள்யு. எம். எஸ். ரத்னப்பிரிய அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

யாழ் கோட்டை இராணுவ முகாம் அருகில் உள்ள ஆஸ்பத்திரி, பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளது.

நான்காவது தடவையாக யாழ் ஆஸ்பத்திரி தாக்குதலுக்காளானது.

மிகவும் ஆபத்தானதும் பாதுகாப்பற்றதுமான இடமாக யாழ் ஆஸ்பத்திரி விளங்குகிறது.

இராணுவ முகாமும் ஆஸ்பத்திரியும் மிக அருகில் இருப்பதால் எப்படி பிரச்சினைக்குத் தீர்வு காணுவது என்பதை எம்மால் சொல்ல முடியாமல் உள்ளது.

எப்படியிருப்பினும் டாக்டர்களையும் நோயாளர்களையும் ஆபத்தை எதிர் நோக்கவிட முடியாது

இப்பிரச்சினைக்கு தீர்வு காண நாம் தலையிட, ஒத்துழைப்புத்தர சித்தமாயுள்ளோம்.

இப்படி சங்கம் தனது அறிக்கையில் கூறியிருக்கிறது. (இ-எ)

## படையினரிடம் சிக்கிய மட்டக்களப்பு கச்சேரிப் பியோன் எங்கே?

மட்டக்களப்பு, அக். 26

ஆயுத படையினரால் கைது செய்யப்பட்டு கல்லடி முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மட்டக்களப்புக் கச்சேரிப் பியோன் கே. செல்வராசா எங்கே?

அவர் முகாமில் இல்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் வீடு வந்து சேரவில்லை என்று அவரின் உறவினர்கள் நேற்று மட்டக்களப்புப் பிரசைகள் குழுவிடம் முறையிட்டனர்.

இது பற்றிய விவரம் வருமாறு;

சென்ற 7 ஆம் திகதி கல்லடித் தெருவில் 150 பேர் வரையில் ஆயுத படையினரால் கைது செய்யப்பட்டனர்.

முகமூடி நபர் முன்னி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அங்காடி வியாபாரிகளை வெளியேறுமாறு கேட்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், அக். 26

யாழ்நகர மத்தியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் உள்ள அங்காடி வியாபாரிகள் ஆரியகுளம் சந்தியை அண்மித்த ஸ்ரான்லி வீதிப் பகுதிக்கு சென்று வியாபாரத்தை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ் மாநகர ஆணையாளர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு;

யாழ். நகர மத்தியிலுள்ள நவீனசந்தை பஸ் நிலைய பகுதிகள் எல்லாவற்றிலும் போக்குவரத்துக்கு பாரிய இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடிய வகையில் அங்காடி வியாபாரிகள் இடம்கொண்டிருப்பது அவதானிக்கப்படுகிறது.

இவற்றை ஒழுங்கு படுத்துமாறும் அகற்றுமாறும் பல்வேறு கோரிக்கைகள் எமக்கு விடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கருத்திற் கொண்டு அங்காடி வியாபாரிகள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து விலகி ஆரியகுளம் சந்தியை அண்மித்த ஸ்ரான்லி வீதிப் பகுதிக்குச் சென்று இந்த வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## படையினரின் 3 நாள் அட்டகாசத்தில் மன்னாரில் லொறிகள் கடைகள் எரிப்பு
### 20 பொதுமக்கள் வரை பலி

மன்னார், அக். 26

கடந்த செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் படையினர் மன்னாரில் நடத்திய அட்டகாசத்தின்போது திருக்கேதீஸ்வரம் ப. நோ. கூ. சங்கத்துக்கு சொந்தமான லொறி மற்றும் டிஸ்பென்சரி உட்பட கடைகள், வீடுகள் சேதமாக்கப்பட்டு எரித்தும் நாசமாக்கப்பட்டன.

அடம்பனில் மட்டும் 5 கடைகளும் 50 வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன.

பாலாவிப் பாலம் சிப்பாய்களால் உடைக்கப் பட்டுள்ளது.

அடம்பன் பகுதியில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 26 பேருக்குமேல் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் நேரில் கண்ட பிரசைகள் குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

21 ஆம் திகதி மாலை தள்ளாடி முகாமிலிருந்து சுமார் 2,000 சிப்பாய்கள் வரை வெளியேவந்தனர்.

இவர்களில் பெரும்பாலோர் கறுப்புச் சட்டை அணிந்திருந்தனர். கோடரி, வாள் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். இவர்களின் ரோந்து நடவடிக்கையின்போது தள்ளாடி முகாமிலிருந்து 5 நிமிடத்துக்கு ஒரு தடவை ஷெல் குண்டுகள், பீரங்கிக் குண்டுகள் ஏவிவிடப்பட்டன. திருக்கேதீஸ்வரத்திலிருந்து பஸ்ஸில் வந்தவர்களை மாந்தை சந்தியில் சிப்பாய்கள் மறித்தனர். சோதனை நடத்தியபின் 5 பேரை தடுத்து வைத்தனர்.

இந்த ஐவரும் பின்பு கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இவர்கள் எரிக்கப்பட்ட தாகக் கூறப்படும் இடத்தை மன்னார் அரசஅதிபர் சென்று பார்வையிட்டார்.

ஐவரில் இருவர் முஸ்லிம்கள்.

அடம்பனில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். 25 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். (இ-ரி-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROCK ENGINEERS & CONTRACTORS IN WATER SUPPLY WORKS

குழாய்க் கிணறுகள்
[மெஷின் மூலம்]

உங்கள் நிலத்தில்
1. மண் கண்டமா
2. கழிக் கண்டமா
3. கற் கண்டமா
4. காவி நீரா
5. உப்பு நீரா
6. நீர் போதாதா

என்ன பிரச்சினையென்றாலும் எம்முடன் கலந்தாலோசியுங்கள். மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்துக்குத் துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெற்றுத் தருவோம்.

24 மணித்தியாலங்களுக்குள் 24 மணித்தியாலமும் தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை அமைத்துத் தருவோம். தொடர்பு கொள்ளவும்.

றெக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்றோ கொம்யூனிக்கேசன்
கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,

குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls.

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# திருத்தப்பட்ட வீதிகள் மீண்டும் பழுதடைகின்றன

யாழ்ப்பாணம், அக். 26

அண்மையில் திருத்தப்பட்ட யாழ் வீதிகள் அண்மையில் பெய்த மழையால் மீண்டும் பழுதடைகின்றன.

இதுபற்றி பெருந்தெருக்கள் திணைக்கள ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; இரண்டாவது தடவையாக தார் போடப்படும் முன் மழை பெய்ததும் தண்ணீர் தேங்காத விதத்தில் நீர்மட்டம்பாராது வீதிகளைப் புனரமைத்ததும்; போக்குவரத்தால் இலகுவில் நொருங்கக் கூடிய தரமற்ற கற்களைத் திருத்த வேலைகளுக்குப் பாவித்ததும் இதற்கான காரணங்களாக இருக்கக் கூடும் என்றார். (இ-5)

## காரைநகரில் மணிவாசகர் மணிமண்டபம்

வட்டுக்கோட்டை, அக். 26

காரைநகர் மணிவாசகர் சபையினர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் மணிமண்டபம் ஒன்றை அழகிய தோற்றத்துடன் அமைக்கவுள்ளர்.

இம்மணி மண்டபத்திற்கான கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மணிமண்டபத்துடன் டன்இந்நூல் நிலையம் ஒன்றும் சொற்பொழிவு மண்டபம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

இம்மணி மண்டபத்துக்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று முடிந்ததும் அடுத்த மாதம் திறப்பு விழா நடத்தப்படுமென சபைத் தலைவரும் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய அதிபருமான திரு. செ. தேவதாசன் தெரிவித்தார். (உ-161)

## பேச்சுவார்த்தை நடத்த முடிவு

சாவகச்சேரி, அக். 26

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கம் சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அத்தியட்சகரை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. த. நவரத்தினராச. தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கச் செயற்குழுக்கூட்டத்தில் இச் சந்திப்புத் தொடர்பாக கடிதமூலம் சம்மதத்தைப் பெறுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-31)

## பாடசாலை தவணைகள்

மட்டக்களப்பு, அக். 26

அரசாங்க பாடசாலைகளின் அடுத்த வருடத்திற்கான தவணை விபரங்கள் பாடசாலை நாட்கள் ஆகிய விபரங்களை கல்வி அமைச்சு சகல பாடசாலைக்ளுக்கும் அறிவித்துள்ளது.

சிங்கள, தமிழ் பாடசாலைகள் தவணை விபரம் வருமாறு;-

முதலாம் தவணை: ஜனவரி 5 தொடக்கம் ஏப்ரல் 3 வரை.

இரண்டாம் தவணை: மே 4 தொடக்கம் ஜூலை 24 வரை.

மூன்றாம் தவணை: ஆகஸ்ட் 25 தொடக்கம் டிசம்பர் 3 வரை.

முஸ்லீம் பாடசாலைகள் விபரம் வருமாறு:-

முதலாம் தவணை: ஜனவரி 5 தொடக்கம் ஏப்ரல் 29 வரை.

இரண்டாம் தவணை: ஜூன் 8 தொடக்கம் ஜூலை 24 வரை.

மூன்றாம் தவணை: ஆகஸ்ட் 20 தொடக்கம் டிசம்பர் 4 வரை. (உ-21)

# பரிசு வழங்குவது மூலம் மாணவர் கல்வியை ஊக்கப்படுத்தலாம்

மானிப்பாய், அக். 26

மாணவர்களை கல்வியில் நாட்டம்பெறவைக்கவும், உற்சாகப்படுத்தவும் வேண்டி பல பரிசுப் பொருள்களையும் வெகுமதிகளையும் வழங்குவது அவசியம். அதிலும் இளம் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு கல்வியில் நாட்டத்தை ஏற்படுத்த முடியும்.

மானிப்பாய் விவேகானந்தாவித்தியாலயத்தில் நடைபெற்ற அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் திரு. பி. ஆர். நடராஜான் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பி. ஆர். நடராஜன் தொடர்ந்து பேசுகையில், சென்ற ஆண்டு ஆறும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இப்பாடசாலை ஸ்தாபகரின் ஞாபகார்த்தமாக அவரின் உறவினரான திருமதி எஸ். வாமதேவன் வழங்கியுள்ள நிதி உதவி

(4-ம் பக்கம் பார்க்க)

# ஸ்கந்தா வட்டு இந்து மோதல்

யாழ்ப்பாணம், அக். 26

மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் இன்று ஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய போட்டியில் ஸ்கந்தா 'பி' பிரிவும் வட்டு இந்து 'பி' பிரிவும் மோதுகின்றன. (இ-5)

அறிவித்தல்

யாழ். சைனீஸ் றெஸ்ரோறண்ட்
முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தாபனம் இரவு 8.30 மணி வரை திறந்திருக்கும்

தொலைபேசி: 23460

# ஒரு மாதத்திற்குப் பின் தீவுப்பகுதிக்கு மீண்டும் மின்சாரம்

வட்வெட்டித்துறை, அக். 24

ஊர்காவற்றுறை, அக், 26

ஒரு மாதகாலமாகத் தடைப்பட்டிருந்த தீவுப்பகுதி மின்சார விநியோகம் சீரடைந்தது.

இம்மாத முதல் வாரத்தில் காரைநகர் கடற்படை முகாமிற்கு அருகாமையில் இருந்த பிரதான மின்விநியோக கம்பங்களில் ஒன்று சரிந்து விழுந்ததால் காரைநகருக்கும் தீவுப்பகுதிக்கும் மின்விநியோகம் தடைப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் பொறியலாளரும், இதர அதிகாரிகளும் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் காரணமாகச் சரிந்துவிழுந்த மின்கம்பம் சீர்செய்யப்பட்டு இதர திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன,

இதன் பின்னர் காரைநகருக்குரிய மின்விநியோகம் மாத்திரம் வழங்கப்பட்டு வந்தது.

வேலணைப் பிராந்திய மின் அத்தியட்சகர் திரு. விஜயசிறி காரைநகர் கடற்படை முகாம் பொறுப்பதிகாரியோடு தொடர்புகொள்ளப் பல முறை முயன்று இறுதியில் 23 ஆம் திகதி அதற்குரிய அனுமதியைப் பெற்றுத் தனது ஊழியர்கள் மூலம் குறிப்பிட்ட அந்த இணைப்புக்களை இயங்கச் செய்தார். (இ.16)

மக்கள் முகம்

## கத்தோலிக்க இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம், அக். 26

கத்தோலிக்க எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களது சேவைகளைப் பாராட்டும் முகமாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க இலக்கிய வட்டம் உருவாக்கப்பட்டது.

இதன் நிர்வாகிகளாக பின்வருவோர். தெரிவுகசய்யப்பட்டனர்.

போஷகர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் தலைவர் திரு. துரை ஆரோக்கியதாசன், உப தலைவர் திரு. பா. அமிதநாயகம் (முல்லைக்கவி) செயலாளர் திரு. யோசப் பாலா (யாழ்பாலன்) இணைச் செயலாளர் திரு ஏட்வேர்ட் லியோன் பொருளாளர் திரு. எம். எ. இரத்தினசிங்கம்.

மேலும் ஏழு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

பிறந்தநாள் வாழ்த்து

செல்வி ருத்சியாம்பலா

ஜெபநேசன்- அனற் ரஞ்சினி தம்பதிகளின் அன்புமகள் ருத்சியாம்பலா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (26-10-86) ஞாயிற்றுக்கிழமை பீச்ரோட், நாவாந்துறையிலுள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

## வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு நடவடிக்கை

பலாலி, அக். 26

வடபகுதியில் வீட்டுத் தோட்ட அபிவிருத்தி சம்பந்தமாக கமத்தொழில் சேவை நிலையம் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இதேவேளை, காளான் உற்பத்தி சம்பந்தமாகவும் கிராமம் கிராமமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நெருக்கடியான காலகட்டத்தில் தமக்குத் தேவையான உணவினைத் தாமே பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காகவே இத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு பகுதிப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் மூலமாகவும் தலா 5 ரூபா பெறுமதியான வீட்டுத் தோட்ட விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

புலிகள், காளான் உற்பத்தி செய்யப்படும் முறைகளை விளக்குவதுடன் தேவையான உற்பத்திக்கான விதைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றனர். (உ-119)

தளபாட மலிவு விற்பனை

✶ தீபாவளி மலிவு விற்பனை ✶

புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T. V. Stands. Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள்:

விலை குறைப்பு தீபாவளி வரை மட்டுமே

கவிதாஸ் - டைனமிக்கா காட்சியறை
இல. 22, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
Tele: 24149

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 87 / 88

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (B.Sc.) (கணிதம்)
வர்த்தகமாணி (B.Com.) சட்டமாணி(LL.B.)

விண்ணப்பங்கள் ஒக்டோபர் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும்; விபரத்திரட்டுகளையும் 'பதிவாளர்' அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக்கட்டளையுடன் சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

* க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள் முடிவு கிடைக்கும்வரை பயிற்சி வகுப்புகளுக்கு இலவசமாக அனுமதிக்கப்படுவர்.

பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 2 - 11 - 86

பதிவாளர்:
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
A S. சங்கரப்பிள்ளை (கட்டடம், 1ம் மாடி.)

கிளை:
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

Patrician Institute of Higher Studies

1. COMPUTER PROGRAMMING COURSE:-
For Professionals and School leavers (6 Months)
Lectures by: Mr N. Sundararajah B.Sc (Eng) Hons (London) A.M.I.C.E.
Weekend Courses, Lectures in A.C. Room, Practicals on APPLE II.

2. MOTOR MECHANISM:
(மோட்டார் மெக்கானிசம்)
6 மாத கால பயிற்சி.

3. LATHE OPERATOR:
(கடைச்சல் யந்திர இயக்குநர்)
3 மாத கால பயிற்றி

4. ARC WELDING:
(எலெக்ரிக் வெல்டிங்)
3 மாத கால பயிற்சி

Details from:
Registrar,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,
59, St. Patrick's Road,
Jaffna.

## மண்ணை மீட்கப் புறப்பட்ட புனித இயக்கங்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்

எனது தொழில் முயற்சிக்கும் சுகயீன முற்றுள்ள எனது தகப்பனாரை ஒவ்வொரு நாளும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும் பாவிக்கப்படும் 81ஸ்ரீ 5353 இலக்க CG 125 ரக ஹொண்டா இன (நீலநிறம்) மோட்டார் சைக்கிள் நள்ளிரவில் இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய இருவரால் கடத்திச் செல்லப்பட்டது.

மிகுந்த கஷ்ட நிலையிலும் முடிந்தளவு சகல இயக்கங்களூடாக எமது பங்களிப்பு செய்யப்பட்டும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

புனித இயக்கங்கள் இதனைக் கண்டு பிடித்து மீளப் பெற்றுத் தந்து எனது பிழைப்பூதியத் தொழிலையும், குடும்பத்தையும் காப்பாற்ற உதவுமாறு வேண்டுகின்றேன்.

சபா. இரத்தினசிங்கம்

சபா ஸ்ரோர்ஸ்,
அச்சுவேலி.

FOR SALE

Diamond ear stud newly made - going Cheap. S Rajah, 43 A. Hospital Road, Jaffna.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்: 02 - 10 - 1941

இறைவனின் மடியில்: 05 - 10 - 1986

றெங்கசாமி — சறோஜா

எங்கள் குடும்பத்தின் பாசச் சுடர் விளக்கே எமது ஆருயிர் தெய்வமே, குன்றாத அறிவின்குன்றே பொறுமையின் பெட்டகமே, அன்புப் பெருக்கோடு நம்மை ஆதரித்துக் காத்தவரே, அறிவுப் பாலூட்டி, தாலாட்டி பேணி வளர்த்த அருமைத் தாயே! உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் நாங்கள் உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். 26-10-86 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் 06-10-86 அன்று அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து தங்கள் அனுதாபங்களை தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
கணவன்: றெங்கசாமி,
பிள்ளைகள்: தில்லையம்பலம், (ராஜி) ராஜேந்திரகுமார் (குமார்), உமாஸ்ரீ (லலிதா) மற்றும் குடும்பதினர்.

புலவர் லேன், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயசங்கற்பம்

உன்னையே நீ அறிவாய்
உன்னையே நீ திருத்திக்கொள்;
உலகம் தானாகவே திருந்திவிடும்.
— சோக்கிரடீஸ்

உதயன்
உண்மை - நிடுநிலைமை - ஒரு நிலைமை

இல. 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 26-10-1986 த. பெ. இல. 23

## தர்மிஷ்டக் கோலம்!

இலங்கை அரசாங்கப் படைகள் இராணுவ நடவடிக்கை மூலம் பொதுமக்களை — சிவிலியன்களை — கொன்றிருப்பதாக வெளிநாடுகளில் கெட்ட அபிப்பிராயம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுச் சஞ்சிகை ஒன்று இலங்கை இராணுவம் மிக மிக ஒழுக்கக் கட்டுப்பாடு குன்றியது என்று வர்ணித்துள்ளது.

இவை எல்லாம் சுத்த முட்டாள்தனமானவையாகும். எனினும் இராணுவ நடிவடிக்கைகளின்போது படையினர் பொது மக்களின் உயிர் குறித்து அக்கறைப்படுவதில்லை என்று எவரும் நினைப்பதற்கு இடம் வைக்கக்கூடாது.

இவ்வாறு கூறியிருப்பவர் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

தியத்தலாவையில் உள்ள இராணுவ அக்கடமியில் பயிற்சி பெறும் இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இராணுவம் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதாகக் கூறுவது முட்டாள்தனம் என்று தெரிவிக்கும் புத்திசாலி அமைச்சருக்கு மன்னார் அடம்பனில் கடந்த புதன்கிழமை நடந்த இராணுவ அட்டகாசம் சமர்ப்பணம்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் 19 வயது இளம்பெண் தம்பிராசா ஞானசீலியின் தாய், தந்தை, நான்கு உடன்பிறப்புக்கள் ஆக முழுக் குடும்பமுமே கணப்பொழுதில் அவர் கண்முன்னால் கொன்று குவிக்கப்பட்ட இராணுவ வெறியாட்டம் அமைச்சர் லலித்தின் புத்திசாலித் தனத்துக்கு ஆப்பு வைத்திருக்கிறது. அல்லவா?

அடம்பன் அக்கிரமம் போன்று, கடந்த மூன்று வருடங்களாக ஆயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்களில் கண்ணீர்க் காவியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அரச படையினர் புரிந்த அரக்கத்தனமே அந்தக் கண்ணீர்க் கதைகளின் கருக்கள் என்பதை மறைக்க முடியுமா?

இந்த உண்மைகளைத் தெரிந்தும் அமைச்சர் அத்துலத் இராணுவத்தின் அடாவடித் தனங்களை மூடி மறைக்க முயல்வதேன்?

அமைச்சர் லலித் அப்படி என்றால் ஜனாதிபதி ஜெயவர்த்தன வேறு சுருதியில் பேசுகிறார்.

உலகிலேயே எந்த அரசாங்கமும் வன்செயலைத் தவிர்க்கவில்லை என்பது அவரின் சப்புக்கட்டை.

அதாவது தமது அரசாங்கம், அரச படைகள் மூலம் செய்விக்கும் வன்செயல்களை அவர் நியாயப்படுத்தப் பார்க்கிறார்.

நிரபராதிகளையும், அப்பாவிகளையும் பாதுகாக்க வன்செயல்கள் இருக்க வேண்டும் என்று அழுத்தியும் கூறியிருக்கிறார் அதி உத்தமர்.

வடக்கிலும் கிழக்கிலும் அரசு வன்செயல்களில் ஈடுபடுகிறது என்று சொல்கிறார்கள். ஆயுதப்படையினர் சில சமயங்களில் அப்பாவிகளையும் கொல்கிறார்கள். பின்னர் இந்த அரசை எப்படித் தர்மிஷ்ட அரசு எனச் சொல்லமுடியும் என்றும் சிலர் கேட்கிறார்கள். ஆனால் வன்செயல்களைக் கண்டிப்பது தர்மிஷ்டத்தின் கருத்தல்ல. சரியான பாதையில் செல்வதைத்தான் தர்மிஷ்டம் என்று அழைக்க வேண்டும்.— இவ்வாறு வியாக்கியானமும் கூறியிருக்கிறார் ஜனாதிபதி!

இதற்கு மேல் யார் எதைச் சொல்ல முடியும்? சொல்ல வேண்டிய அவசியம்தான் என்ன?

ஸ்ரீலங்காவில் ஆட்சிபுரியும் ஐ. தே. க. அரசாங்கத்தின் தர்மிஷ்ட ஆட்சியின் முழு மேனியையும் ஜனாதிபதி நிர்வாணமாகக் காட்டிவிட்டார். இதற்கு மேல் அதன் உள்ளமும், செயலும் எவ்வாறு இருக்கும் என்று எவருமே கற்பனை செய்து பார்க்கலாம்.

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது முதுமொழி. அதே வகையில் அரசு எவ்வழி படைகள் அவ்வழி என்று கூறத்தகுந்த முறையில் ஸ்ரீலங்கா அரசின் உயர்பீடம் இருக்கிறது.

உயர்மட்டத்தினர் இப்படிக் கருத்துத் தெரிவிக்கும் போதெல்லாம் படையினர் அரக்கத்தனத்தில் ஊக்கம் காட்டாமல் வேறு என்ன செய்வர்?

இதே தர்மிஷ்ட அரசு தமிழ் இனத்தை ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டவில்லை என்று சொன்னால் எந்த மடையன் இனி நம்புவான்!

## வெகுஜனப்போராட்டம் நடத்துவதற்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம், அக். 26

யாழ் அரசஅலுவலகங்கள், பாடசாலைகள், மின்சார நிலையங்கள், தனியார் ஸ்தாபனங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், வங்கிகள், போக்குவரத்துக்கள், வர்த்தகத்துறைகள், அனைத்தும் ஸ்தம்பிதம் அடையும் வெகுஜனப் போராட்டம் அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாததன் காரணமாக சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைத்துள்ளது.

வடபகுதி மக்களின் பாதுகாப்புப்பற்றி எடுத்துரைப்பதற்கு தகுந்த அரசாங்க அதிகாரி யாழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மேற்கு வங்காளம் பிரிக்கப்படமாட்டாது

### கூர்க்கா கோரிக்கை அபத்தம் என பூட்டாசிங் அறிவிப்பு

கல்கத்தா, அக். 25

மேற்கு வங்காள மாநிலம் பிரிக்கப்படமாட்டாது என்றும் பிரதேச உணர்வுகளுக்குப் பணிந்து செல்லும் வகையில் அரசியல் சாசனம் திருத்தப்படமாட்டாது என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் இதனைத் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் மேற்கு வங்க மாநில அரசிற்கு மத்திய அரசு எல்லா உதவிகளையும் வழங்கும்.

மேற்கு வங்க அரசின் வேண்டுகோளுக்கு இணங்க அதிக அளவிலான இராணுவத் துருப்புக்கள் அங்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கூர்க்கா தேசிய முன்னணியின் கிளர்ச்சி பற்றிய விவரத்தில் இவ்வாறு பூட்டாசிங் தெரிவித்தார்.

தேசிய கீதம்கூட மாற்றப்பட வேண்டும் என சிலர் கூறிவருவது அர்த்தமற்றது எனவும் அவர் தெரிவித்தார். (ஒ)

## சிரியா உறவுகள் துண்டிக்கப்படுகின்றன

வாஷிங்டன், அக். 25

சிரியாவிற்கான தமது தூதரை அமெரிக்கா விலக்கிக் கொண்டுள்ளது.

ஏப்ரல் மாதம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இஸ்ரவேல் விமானம் ஒன்றைத் தகர்ப்பதற்கு பயங்கரவாதி ஒருவர் எடுத்த முயற்சியில் சிரியாவிற்கும் தொடர்பிருந்த காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பிரிட்டனும் தனது சிரியாவுடனான உறவுகளை ஏற்கனவே துண்டித்துள்ளது.

கனடாவும் உறவுகளை துண்டிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

இவற்றிற்கு எதிர் நடவடிக்கையாக சிரியாவில் உள்ள சகல பிரிட்டிஷாரும் ஏழு தினங்களுக்குள் வெளியேறிவிட வேண்டும் என சிரியா அறிவித்துள்ளது. (ஒ)

## கிம் - இல் - சுங் மாஸ்கோ விஜயம்

மாஸ்கோ, அக். 25

வட–கொரியா ஜனாதிபதி கிம் — இல் — சுங் மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

1964 ஆம் ஆண்டிலும் கிம்—இல்—சுங் ரஷ்யா சென்றிருந்தார்.

வட–கொரியாவின் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் இந்த விஜயத்தின்போது மேற்கொள்ளப்படும். (ஒ)

வெளி உலகில்

## சீனுவின் மூத்த தலைவர் மறைவு

பீக்கிங், அக். 25

கடந்த ஒரு வருடகாலமாக உணர்வற்ற நிலையில் இருந்துவந்த சீனுவின் மூத்த தலைவர்களில் ஒருவரான மார்ஷல் யீ ஜியான் ஜிங் தமது 90 வயதில் காலமானார்.

ஆரம்பத்தில் சீனத் தலைவர் டெங்ஸியாவோ பிங்கின் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு எதிரானவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக மார்ஷல் யீ திகழ்ந்தார். (ஒ)

### 1985 இல் கிளிநொச்சி வந்த

# வவுனியா அகதிகள் மீண்டும் பழைய இடங்களுக்கு

கிளிநொச்சி, அக். 26

வவுனியாவில் இராணுவக் கெடுபிடிகளால் அகதிகளாக்கப்பட்டு தமது உடைமைகளையும் உறைவிடங்களையும் விட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்தவர்கள் மீண்டும் வவுனியாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

கடந்த 85 ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து சில நாட்களும் வவுனியாவிலுள்ள சூசைப்பிள்ளையார் குளம், பறையனாலங்குளம் போன்ற இடங்களில் இருந்து இராணுவக் கெடுபிடிகளால் அகதிகளாக வெளியேறிய சுமார் 260 குடும்பங்கள் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தன.

ரயில்மூலமும் இ.போ.ச. பஸ்மூலமும் தனியார் வாகனங்கள் மூலமும் கிளிநொச்சி வந்த இந்த அகதிகள் கிளிநொச்சி கனிஷ்டவித்தியாலயத்தில் தஞ்சமடைந்தனர்.

கனிஷ்ட மகாவித்தியாலயம் இராணுவ முகாமின் எல்லையாக இருப்பதனை சுட்டிக் காட்டி இந்த அகதிகள் ஒரு சில தினங்களில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலாத்திற்கு மாற்றப்பட்டனர்.

அங்கிருந்த அனைவரும் பின்னர் கிளிநொச்சி கச்சேரி சமூக சேவைப் பகுதியினரின் நடவடிக்கையினைத் தொடர்ந்து கிளிநொச்சியிலுள்ள கோணாவில், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், குருகுலம் ஆகிய நான்கு முகாம்களில் வைத்து பராமரிக்கப்பட்டனர்.

இவர்களில் அனேகர் கூலிவேலை செய்பவர்களும், சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் ஆவர்.

இவர்களை மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாககிளிநொச்சி கச்சேரி சமூகசேவைப் பகுதியினர் மேற்கொண்ட நடவடிக்கையினைத் தொடர்ந்து இவர்கள் அனைவரும் இவ்வார இறுதிக்குள் வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவர்களை வவுனியாவிற்கு அனுப்பி வைக்க கிளிநொச்சி இ.போ.ச. பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இங்கிருந்து மீண்டும் தமது பழைய மாவட்டத்திற்கு செல்லும் அனைவரையும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்பார். (இ-76)

## வாசகர் திருமுகம்

### குளங்களைச் சீராக்கி மழை நீரைத் தேக்குங்கள்

''குளங்களைச் சீராக்கி மழை நீரைத் தேக்குங்கள்'' ஆசிரியர் தலையங்கத்தை 16-10-86 திகதிய உதயனில் வாசித்து மகிழ்ந்தோம்.

சென்ற பத்து வருடங்களுக்கு மேலாக இதையே வற்புறுத்தி எங்கள் மில்க்வைற் செய்தியில் பன்முறை வெளியிட்டுள்ளோம்.

அத்துடன் பல சமூக நிலையங்களை நேரிற் சந்தித்தும், தொடர்புகொண்டும் அவ்விடங்களிலே உள்ள குளங்களை ஆழமாக்கத் தூண்டுகோலாக பல மண்வெட்டிகளையும் தாச்சிகளையும் முறைக்கு முறை கொடுத்துதவிக்கொண்டே வருகின்றோம்.

இன்னும் உபகரணங்களைக் கொடுத்துதவச் சித்தமாகவுள்ளோம். என்பதை இதில் அக்கறை உள்ளவர்கள் எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

இதுவரை காலமும் இத்தொண்டில் நாம் தனித்து நின்றோம். ஆனால் இப்போ உங்கள் பிரசார மனோநிலை உதவியையும் பெற்றுள்ளோம் என்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சிறடைகின்றோம்.

க. கனகராசா
யாழ்ப்பாணம்.

### சிங்கராயர் வழக்கு:

## ஆட்சேபனை மீதான தீர்ப்பு 27 இல்

கொழும்பு, அக். 26

வண பிதா ஆபரணம் சிங்கராயர் மீது புதிதாக தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட குற்றப் பத்திரிகைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபனை மீது தீர்ப்பு வழங்குவதை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் அக்டோபர் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

திருத்தப்பட்ட குற்றப் பத்திரிகையின் கீழ் சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை மறைத்து வைத்திருந்ததாகவும் அல்லது அவர்கள் கைத்தாவதைத் தடுத்ததாகவும் வண பிதா சிங்கராயர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இரண்டாவது குற்றச் சாட்டின் கீழ், சாவகச் சேரி பொலீஸ் நிலையத் தாக்கியவர்களுக்கு ஒத்தாசைபுரிந்ததாக வண பிதா. சிங்கராயர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமிழில் இக்குற்றப் பத்திரிகைகள் வண பிதா சிங்கராயருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப்பட்டன.

சாதாரண சட்டத்தின் கீழ் இக் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாத படியால் இவற்றை ஏற்க முடியாதென வண. பிதா சிங்கராயர் நீதிபதிக்குத் தெரிவித்தார்.

விசேட சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் வண. பிதா சிங்கராயர் தெரிவித்தார். (இ-2)

### கவிக் குரல்கள் வெளியீட்டு விழா

சுன்னாகம், அக். 26

சுன்னாகம் கிழக்கு சன சமூக நிலையத்தின் கவிதை ஒலி நூல் வெளியீடான 'கவிக்குரல்கள்' வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

கவிஞர் துரையர் எழுதிய 'கவிக்குரல்கள்' வெளியீட்டு விழாவுக்கு முன்னாள் கல்வி அதிகாரி திரு. ச. இராசா தலைமை வகிக்கிறார்.

வெளியீட்டுரையை நீர்வை பொன்னையனும், ஆய்வுரையை மாதகல் கந்தசாமியும், நாவேந்தனும் நிகழ்த்துவர்.

மக்கள் கலைமன்றம் அளிக்கும் வி. எம். குகராசாவின் 'விண்ணையும் சாடுவோம்' என்ற நாடகமும் [illegible] (இ-27)

# கிறிஸ்துவுக்காக துன்பம் ஏற்காவிடில் வாழ்வில் பயனில்லை

அரச ஆகமம் 5ஆம் அதிகாரம் 14-17 ஆம் வசனங்கள்.

நாமான். இவர் சீரிய நாட்டின் படைவீரர்களில் ஒருவர். இவருக்கு தொழு நோய் ஏற்பட்டதினால் அதைக் குணமாக்க அரசனின் கடிதம் பெற்று வட அரசில் வாழ்ந்த இறைவாக்கினரான எலிசேயுவிடம் சென்றார்.

அங்கு பெரும் அற்புதச் செயலினால் ஒரு நொடியில் தன் நோயை இறைவாக்கினர் குணமாக்குவார் என்னும் பெரும் எண்ணத்துடனேயே சென்றார். இறைவாக்கினரான எலிசேயு அவரை ஏழு தடவைகள் ஜோர்தான் ஆற்றில் கழுவும்படி கூறினர்.

நாமானுக்கோ தனது பதவியும் கௌரவமும் இதனால் அவமானப்படுத்தப்படுவதாக எண்ணி

## ஞானக்கதிர்

அதனைச் செய்ய மறுத்தார்.

ஆனால் ஈற்றில் இறைவாக்கினரின் சொல்படி நடந்து குணம் பெறுவதை நாம் காண்கின்றோம்.

நாமும் எம் நாளாந்த வாழ்வில், பேரும் புகழும் கிடைக்கும் காரியங்களிலும், பெரும் வல்லமை மிக்க செயல்களிலும் இறைமாட்சியைக் காணமுற்படுகிறோம்.

ஆனால் மிகச் சிறிய, மற்றவர்களால் தாழ்வாகக் கருதப்படக்கூடிய செயல்களில் கூட இறைவனின் மாட்சி உண்டு என்பதை மறந்து விடுகின்றோம். இம் மாட்சி எம்மில் வெளிப்பட திடமான விசுவாசம் எம்மில் இருக்க வேண்டுமென்பதை இச்சம்பவம் எமக்கு தெளிவுபடுத்துகின்றது.

திருமோத்தேயுவின் 2ம் அதிகாரம் 8–13ம் வசனங்கள்

குறித்த வாக்கியங்களில் ஒரு கிறிஸ்தவன் தன் துன்பங்களை எவ்வாறு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதைக் காண்கிறோம்.

நாம் எவ்வகையில் துன்புறும் போதும் கிறிஸ்துவின் முன்மாதிரியை மனதில் கொள்ள வேண்டும்.

இறைமகன் கிறிஸ்து பாவிகளாகிய எமக்காக தம் உயிரையே அர்ப்பணித்தார் என்றால் பாவிகளாகிய நாம் அவருக்காக எம் வாழ்வில்



அணுஅளவான துன்பத்தைக் கூட ஏற்காது விட்டால் நான் (கிறிஸ்து-அவன்) கிறீஸ்தவன் என்ற பெயரோடு வாழ்வதில் பயன் இல்லை.

'உடலைக் கொன்றபின் அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம்' என்று கூறிய யேசுவின் பொருள் துலங்க புனித சின்னப்பர் இங்கு 'கடவுளுடைய வார்த்தைக்கு விலங்கெதுவும் இல்லை' என்று கூறுகின்றார்.

எனவே இக்கட்டான சூழ்நிலையின் மத்தியிலும் இறைவார்த்தையின் மேலுள்ள விசுவாசத்தை இழக்காது வாழ முயற்சிப்போமாக. (இ)

ஈ. ரி. இம்மனுவல்

## சமய சந்நிதிகளில்

### திருவிளக்கு பூசை

மானிப்பாய், அக். 26

வண்ணார்பண்ணை–வடமேற்கு ஸ்ரீ வீரமாபிடாரி அம்மன் ஆலயத்தில் ஆலய பூசையைத் தொடர்ந்து சுமங்கலி பூசை (திருவிளக்குபூசை) சிறப்பாக நடைபெற்றது.

மாதந்தோறும் இக்கோவிலில் நடைபெறும் இவ்விசேஷ பூசையில் இது பதின் நான்காவது. தீபலக்ஷ்மி பூசை ஆகும். (இ – 90)

### கேதாரகௌரி விரதம்

யாழ்ப்பாணம். அக். 26

சண்டிலிப்பாய் மாகியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் ஆலயத்தில் வழமைபோல் கேதாரகௌரி விரதம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 60 விரதிகள் பங்குபற்றுகின்றனர். எதிர்வரும் முதலாம் திகதி காப்புக் கட்டும் நிகழ்ச்சியுடன் விரதம் நிறைவுறும்.

16 ஆம் திகதி திருக்கார்த்திகை அன்று தீப பூஜை (சுமங்கலிப் பிரார்த்தனை) நடைபெறவுள்ளது. (இ)

### சுன்னாகத்தில் பாலர் பாடசாலை

சுன்னாகம், அக். 26

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் ஆதரவில் பாலர் பாடசாலை ஒன்று சுன்னாகம் வரிசப்புலத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவன உதவி இயக்குநர் செல்வி இராஜேஸ்வரி அப்பையா மங்கள விளக்கேற்றி வைக்க, இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. க. சிவப்பிரகாசம் இதனைத் திறந்து வைத்தார். (இ–27)

### அதிபருக்கு வரவேற்பு

உருத்திரபுரம், அக். 26

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதனுக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் முரசுமோட்டை அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டு மதிய போசன விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வைபவம் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றது. (இ–155)



## பொய்யாமொழி

குறள்:

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

பொருள்:

களவு செய்வார்க்கு உடலில் உயிர் வாழும் வாழ்வும் தவறிப் போகும்; களவு செய்யாமல் வாழ்வோருக்குத் தேவருலகும் வாய்க்கத் தவறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
Learn from the pioneers in computer education
Fees/ 1500/- (payable in installments)
Practicals in fully air conditioned
environment for not less than 60 hours

Cantabia Institute
21, Main Street, Jaffna
T-Phone: 24201

# உதயன்

26 - 10 - 1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
Basic Language
6 Months — Weeke
Date of Commencement;
25th October 1986 at 10 A. M

Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone 2420

தமிழீழம் நிதர்சனம்: மைத்திரி

# இராணுவத்தை விஸ்தரிப்பதால் உரிய பயன் கிடைத்ததா?

## கலவான எம். பி. கேட்கிறார்

கொழும்பு, அக்.26
தீவிரவாதத்துக்கு முடிவுகட்டி விடலாம் என்று வடபகுதிக்கு இராணுவத் தளபதிகள் பலரை அரசு அடுத்தடுத்து அனுப்பியது.

ஆனால் அரசாங்கம் நினைத்த பலன் கிடைத்ததா?

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் கலவான எம்.பி.திரு. டியூ. குணசேகர மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணைமீது அவர் பேசினார்.

திரு. டியூ.குணசேகரா மேலும்சொன்னதாவது;

இராணுவத்தில் புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன. பாதுகாப்புச் சபை விஸ்தரிக்கப்பட்டது. இராணுவ ஆலோசகர்கள் மாற்றப்பட்டனர். பாதுகாப்புக்கு பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டதா?

1983 ஜூலைக்குப் பின்னர் நாட்டில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பதை அரசு தெரிவிக்க வேண்டும். மக்களும் இந்த எண்ணிக்கையை அறிய விரும்புகிறார்கள்.

### 5 லட்சம் அகதிகள்

பிரச்சினைக்குத் தீர்வு காண அரசமைப்புச் சட்டத்தை நான்கு முறை அரசாங்கம் திருத்தியுள்ளது.

சுமார் 5 லட்சம் பேர் அகதிகளாக உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் வாழ்கின்றனர்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சுமார் 89கோடி ரூபாவை நட்டஈடாக வழங்கியுள்ளது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 20கோடி ரூபாவை நட்டஈடு வழங்கியது

இன்னும் சுமார் 30 கோடி ரூபா சம்பந்தமான நட்டஈட்டுக் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படவுள்ளன. இது பொதுப்பணம்.

இப்படி திரு. குணசேகரா சொன்னார்.

### மைத்திரி

மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபாலசேன நாயக்கா (சுதந்திரக் கட்சி) சொன்னதாவது;-

அவசரகாலச் சட்டம் நீடிக்கப் படுகின்றது. அதேபோல் வன்செயல்களும் தொடர்கின்றன.

வடபகுதி முழுவதும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கிழக்கின் மூன்றில் இரண்டு பகுதி தீவிரவாதிகளின் கையில் உள்ளது.

விரைவில் மலை நாடும் தீவிரவாதிகளின் கைகளுக்கு போக உள்ளது இதில் சந்தேகமே இல்லை. மன்னாரில் நிலைமை சூடாகிக் கொண்டு இருக்கிறது. மதவாச்சி, கஹட்டகஸ்கிலிய பகுதிகளிலும் பதற்றம் காணப்படுகிறது.

தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் எங்கேயிருந்து கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியாதா?

### தமிழீழம் நிதர்சனம்

தமிழீழம் அமைவது நிதர்சனமாகி வருகின்றது அதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

இந்த நிலையில் எல்லை நிர்ணயக் கமிஷன் ஒன்றை நிறுவ அரசு யோசித்து வருவது அதிர்ச்சியைத் தருகிறது.

தற்போதைய எல்லைகள் மாற்றப்பட்ட பின்னர் எப்படி அரசு இப்பிராந்தியங்களை நிர்வகிக்கப் போகிறது?

அரசு இது பற்றி மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

நாளுக்கு ஒரு கதை

இலங்கை அரசின் திட்டம் பற்றி இந்திய அரசுக்கும் தீவிரவாத இயக்கங்களுக்கும் மட்டுமே தெரியும். சிங்கள மக்களுக்கு ஒன்றுமே தெரியாது.

கூட்டணி தன்னுடன் நிற்கிறது என்று அரசு ஒருநாள் கூறுகிறது. தன்னுடன் இல்லை என்று மறுநாள் கூறுகிறது.

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் எப்படி கிடைக்கின்றன என்பது பற்றி அரசாங்கம் ஆராயக் கூடாதா? - இவ்வாறு அவர் கூறினார்.

கேகாலை மாவட்ட அமைச்சர் என். ஏ. செனவிரத்ன:

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தான் இனப் பிரச்சினையே தோன்றியது. அந்த நேரம் தமிழருக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா:பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தது யார்? யு. என். பி. யும் சிங்களம் மட்டும் கொள்கையைத் தான் அனுசரித்தது. (அ-எ)

## விளையாட்டரங்கு

### மகாஜனை வெற்றி

யாழ்ப்பாணம், அக். 26
மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது.

முதல் போட்டியாக நேற்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மகா வித்தியாலயம் போட்டியிட்டது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி 3 - 0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இந்த ஆட்டம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை 4.30 மணி அளவில் நடைபெற்றது

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அடுத்த போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

(2-ம் பக்கமும் பார்க்க)

பிறந்த தின வாழ்த்து



செல்வி சாவித்திரி தேவராஜா

மானிப்பாய், சாத்தவத்தையைச் சேர்ந்த தேவராஜா நிர்மலாதேவி தம்பதிகளின் அன்பு மகள் சாவித்திரி இன்று (26-10-86) ஞாயிற்றுக்கிழமை தனது 5வது பிறந்த நாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை ஜேர்மனியில் இருக்கும் அப்பா, அம்மா, தம்பியும் கல்வியங்காடு அப்பப்பா, அப்பம்மாவும் ஜேர்மனியில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மாவும் இந்தியாவில் இருக்கும் சின்னசித்தப்பா, சித்தி, தம்பியும் கனடாவில் இருக்கும் சித்தப்பாவும் ஜேர்மனியில் இருக்கும் சித்தப்பா மாரும் அம்மப்பா, அம்மம்மாவும் கண்டியில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மாவும் தாவடியைச் சேர்ந்த பெரியப்பா, பெரியம்மாவும் ராணிசித்தி, வசந்தி சித்தி, மாமன்மாரும் முருகன் அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 26- 10 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15 Second Lane Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86

### பரிசுவழங்கு---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வருடம் நவம்பர் மாதத்தில் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு, எஸ். வரதராஜா நன்றி கூறினார். (இ-90)

### வெகுஜன . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)
நகரில் இல்லை.

யாழ் மக்கள்மீது தாக்குதல் நடத்தப்படும் கோட்டை முகாம் அகற்றப்படவேண்டும்.

மேற்கண்டகோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படும். (இ-10)

### பாராட்டு விழா

யாழ்ப்பாணம், அக். 26
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினர் திரு. சபாரத்தினத்துக்கு இன்று மாலை நான்கு மணிக்கு யாழ் புனித பத்திரிசியார் பழைய மன்றத்தில் பாராட்டு விழா நடத்த உள்ளனர்.

துரை ஆரோக்கிய தாசன் விழாவில் தலைமை உரை நிகழ்த்துவார்.

இதே வேளை யாழ் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் அவை நடத்தும் பாராட்டு விழாவும் இன்றுகாலை 8 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (இ-எ)

### பல்கலைக்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
காலை, பல்கலைக் கழக மண்டபத்தில் நடந்தது.

பழைய, புதிய மாணவர், கல்வித்துறைப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

துணை வேந்தர் பேராசிரியர் கே. டி. அருள்பிரகாசம் தலைமை வகித்தார்.

பதிவாளர் ஜனப் .எம். எச்.எம். ஜமீலும கலந்து கொண்டார்.

அரசியல்வாதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. (இ-எ-21)

### இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், அக்.26
பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டம் இன்று ஞாயிறு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

ஒன்றிணைப்புக் குழு அமைப்பாளர் நாயகம் திரு. எஸ். சிவானந்தராசா இதனைத் தெரிவித்தார். (இ-5)

### படையினர்--

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
லையில் இவர்கள் நிறுத்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து 12 பேர் தடுத்துவைக்கப்பட்டனர்.

இவர்களில் 4 பேர் கடந்த வெள்ளி விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் செல்வராசா விடுவிக்கப்படவில்லை. முகாமுக்கு முதலில் சென்ற சமயம் மஞ்சள் காமாலை நோய் காரணமாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று கூறப்பட்டது.

நேற்று முன்தினம் பார்க்கச் சென்றபோது அவர் முகாமில் இல்லை என்று கூறப்பட்டது.

அவரின் உறவினர்கள் நேற்று மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவுக்கு முறையிட்டனர். (இ-எ-உ)

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை,
யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை
உடன் இணைந்து நடாத்தும்

## நாடக விரிவுரைகளும் களப்பயிற்சியும் -- 1986

(3 மாத காலப் பயிற்சி நெறி)

மேற்படி விரிவுரைகளும், களப்பயிற்சியும் 1986ம் ஆண்டு நவம்பர் 15ந் திகதி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8. 30 மணிமுதல் 1. 30 மணிவரை மூன்று மாதங்கட்கு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவத்திற்கமைய மெற்றிக்களவு அரைத்தாளில் தயாரித்து, பூரணப்படுத்தி 7. 11. 86க்கு முன்னர்.

திரு. வை. மு. பஞ்சாலிங்கம்,
யாழ். மாவட்ட கலாசாரப்
பேரவைத் தலைவரும்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பப்படல் வேண்டும். இக்கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''நாடகப் பயிற்சி நெறி'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

விரிவுரைகள்/ களப்பயிற்சிகட்கு பயிலுநர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். பயிற்சிக் காலத்தில் படிகள் எதுவும் வழங்கப்படமாட்டா. பயிற்சி நெறி இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும் இச்சான்றிதழ் பெறுவோருக்கு கலாசாரப் பேரவையின் கீழ்வரும் நிறுவனங்களின் தெரிவுகளில் முன்னுரிமை அளிக்கப்படும்.

வை. மு. பஞ்சாலிங்கம்,
யாழ். மாவட்ட கலாசாரப்
பேரவை தலைவரும்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

மாதிரிப் படிவம்

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை,
யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையுடன்
இணைந்து நடாத்தும்
நாடக விரிவுரைகளும்
களப்பயிற்சியும் - 1986
(3 மாத காலப்பயிற்சி நெறி)

01. முழுப்பெயர்:
02. (அ) தேசிய அடையாள அட்டை இல:
(ஆ) வேறு அடையாள அட்டை இல:
03. விலாசம்:
04 (அ) பிறந்த ஆண்டு, மாதம், திகதி:
(ஆ) வயது: பால்:
05. கல்வித்தகைமை:
06. நாடக அனுபவம்:
06: 1 நடித்த நாடகங்கள்
06: 2 எழுதிய நாடகங்கள்
06: 3 நெறியாள்கை செய்த நாடகங்கள்
06: 4 பங்கு பற்றிய நாடக மன்றங்கள் (விலாசத்துடன்)
06: 5 நாடகத்தில் கொண்ட ஈடுபாடு
07. வேறு கலை, இலக்கிய ஈடுபாடு

மேற்படி விபரங்கள் யாவும் நான் அறிந்தவரையில் உண்மையென உறுதிப்படுத்துவதோடு, களப்பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட ஆயத்தமாகவும் உள்ளேன்.

.................... ............................
திகதி: கையொப்பம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org